திர்மானம் பேரவையின் முடிவுக்கு விடப்பட்டு, நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கப்பட்டது.

DR. H. V. HANDE : We want division.

(மணி அடிக்கப்பட்டது)

மாண்புமிகு பேரவைத் தலைவர் : இப்பொழுது திரு. இராம. அரங்கண்ணல் அவர்களுடைய திர்மானம் வாக்கெடுப்புக்கு விடப்படுகிறது. திர்மானத்தை ஏற்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன் . . . திர்மானத்தை மறுப்போர் எழுந்து நிற்க வேண்டுகிறேன். (திர்மானத்தை ஏற்போரும், மறுப்போரும் தனித்தனியே எழுந்து நின்று இருக்கைகளில் அமர்ந்த பிறகு, திர்மானத்தை ஏற்போரின் எண்ணிக்கையைக் காட்டிலும், மறுப்போரின் எண்ணிக்கை குறைவாக இருப்பதால், திர்மானம் நிறைவேற்றப்பட்டதாக அறிவிக்கிறேன்.

திரு. ஏ. அ. சுப்பராஜா : நாங்கள் 4 பேர் நியூட்ரலாக இருக்கிறோமே அறிவிக்க வேண்டாமா?

மாண்புமிகு பேரவைத் தலைவர் : நான்கு உறுப்பினர்கள் நடுநிலைமை வகிக்கின்றனர் என அறிவிக்கின்றேன்.

3. ஒற்றிவைப்புத் தீர்மானம்.

வெள்ளர்கோடா கிராமத்தில் நக்சல்பாரிகள் ஒரு வீட்டில் புகுந்து 5 பேர்களைக் கொலை செய்ததுபற்றி

மாண்புமிகு பேரவைத் தலைவர் : திருவாளர்கள் என். எஸ். வி. சித்தன், க. இராமமூர்த்தி, ஜே. ஜேம்ஸ் ஆகிய மூவரும், நேற்றைய தினம் கேரள எல்லைக்கு அருகில் பிச்சிர்காடு எஸ்டேட் அருகில் வெள்ளர்கோடா என்னும் கிராமத்தில் 8—9—1970 அன்று ஒரு வீட்டில் ஆயுதம் தாங்கிய நக்சல்பாரிகள் புகுந்து 3 குழந்தைகள் உள்பட 5 பேரைப் படுகொலை செய்த, இந்த அவசரப் பொது முக்கியத்துவம் வாய்ந்த பிரச்னையை விவாதிப்பதற்காகப் பேரவையின் பிற அலுவல்களை ஒத்திவைக்க வேண்டுமென்று 42-வது விதியின்கீழ் ஒத்திவைப்புத் தீர்மானங்கள் கொடுத்து இருக்கிறார்கள். இப்போது அவையின் விவாதத்தில் இருக்கிற நம்பிக்கை இல்லாத் திர்மானத்தின்மீது இது பற்றிக் கருத்து தெரிவிக்கும் வாய்ப்பு இருப்பதால் நான் இதற்கு அனுமதி தர மறுக்கிறேன்.

4. அரசினர் தீர்மானம்

விதி 41 (3) ஐத் தளர்த்தல்

மாண்புமிகு திரு. இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, "சட்டப் பேரவையின் 244-வது விதியின்கீழ், 41-வது விதியின் (3)வது உட்பிரிவின் படி, அதாவது, ஒரே கூட்டத்தில் இரண்டுக்கு மேற்பட்ட காரியங்களைக் கொண்டு வரக்கூடாது என்பதை இன்று தளர்த்த வேண்டும்" என்று கோருகிறேன்.

தீர்மானம் பேரவையின் முடிவிற்கு விடப்பட்டு, ஒருமனதாக நிறைவேற்றப்பட்டது.